பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 12 2025 SATURDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. **வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா மூலம் ஊரக பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

2. **சென்னை எழும்பூர் — திருநெல்வேலி வந்தேபாரத் ரயில் விருதாச்சலத்தில் நின்று செல்ல அனுமதி அளித்துள்ள ரயில்வே அமைச்சருக்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துள்ளார்.**

3. **திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை அருங்காட்சியகத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.**

4. **மனித —வன விலங்கு மோதல்களை கட்டுப்படுத்துவதற்கான மையம் இன்று நீலகிரி மாவட்டம் கூடலூரில் தொடங்கப்பட்டுள்ளது.**

5. **உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.**

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா மூலம் ஊரக பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகானின் இந்த மசோதா தொடர்பான கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், இதன்மூலம், வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த மசோதா மூலம் வேளாண் உற்பத்தி மேம்படும் என்றும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் இணைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த, சுயசார்பு ஊரக இந்தியாவிற்கு இம்மசோதா வழிவகை செய்யும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

நாட்டில் மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் **31** பில்லியன் டாலரை எட்டியுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றில் தாம் எழுதியுள்ள கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி **38** சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும், திறன் தொழில்நுட்ப பரிமாற்றம் மேம்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

சென்னை எழும்பூர் — திருநெல்வேலி இடையேயான வந்தேபாரத் ரயில் இருமார்கங்களிலும் விருதாச்சலம் ரயில் நிலையத்தில் நின்று செல்லும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு குறித்து தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், விருதாச்சலம் மக்கள் சார்பாக தாம் விடுத்த கோரிக்கையை ஏற்று ரயில்வே அமைச்சர் இதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

தமிழக மக்களிடமிருந்து முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற பிரதமர் திரு

நரேந்திர மோடிக்கும், தமது நன்றியை தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

தொழில் மற்றும் பணி நிமித்தமாக பயணம் மேற்கொள்ளும் விருதாச்சலம் சுற்றுவட்டாரப்பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு பயன்படும் வகையில் ரயில்வே அமைச்சர் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புக்கு தமிழக மக்கள் சார்பில் தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

தமிழர் பண்பாட்டின் தொன்மை சிறப்பை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல மாநில அரசு முழுவீச்சில் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை அருங்காட்சியகத்தை இன்று திறந்துவைத்து பேசிய முதலமைச்சர், சங்ககால துறைமுக நகரமான கொற்கையை பற்றி சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளதாக கூறிய அவர், தாலமி, பிளினி போன்ற அயல்நாட்டவர்களும் இதுபற்றி எழுதியிருப்பதாக கூறினார்.

கொற்கையில் கிடைக்கக்கூடிய முத்துக்கள் சிறப்பானவை என்றும், ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற இடங்களில இரும்புகாலத்தை

சார்ந்த பகுதிகளும் மக்களின் வாழ்விடப்பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆதிச்சநல்லூர், சிவகளை பகுதிகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் உலோகத்தால் செய்யப்பட்ட தொல்பொருட்கள் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இரும்பை உருக்கி கருவிகளை செய்யும் தொழில்நுட்பம் தமிழகத்தில் சிறப்பாக இருந்த்தற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பொருநை அருங்காட்சியகம் 55 ஆயிரம் சதுர அடியில் மரபார்ந்த வடிவமைப்போடும், அதிநவீன தொழில்நுட்பத்தோடும் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழர்களின் தொன்மை மற்றும் நாகரீக மேன்மையை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு நிதின் நபின் இன்று சென்னை வந்துள்ளார்.

விமான நிலையத்தில், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர்.

<<<<<<>>>>>>>

மனித — வன விலங்கு மோதல்களை கட்டுப்படுத்துவதற்கான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் இன்று நீலகிரி மாவட்டம் கூடலூரில் தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த மையத்தின் மூலம், மனித — வனவிலங்கு மோதல்கள் அதிகமாக காணப்படும் 46 பகுதிகளில் அதிநவீன செயற்கை நுண்ணறிவு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 24 மணிநேரமும் இந்த கேமராக்கள் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வனத்துறை முன்களப் பணியாளர்களுடன் யானை விரட்டும் காவலர்கள் வேட்டை தடுப்பு மற்றும் அதி விரைவுக்குழு காவலர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன உயிரினங்களால் ஏற்படும் மனித உயிரிழப்பு, மனித காயம் மற்றும் கால்நடை சேதங்களுக்கு 24 மணிநேரத்திற்குள் நிவாரணத் தொகை வழங்கும் பணியும் இந்த மையத்தின் மூலமை

மேற்டிகொள்ளப்படும் என்றும் அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தின் மூலம் வனவிலங்குகள் நடமாட்டம் குறித்த எச்சரிக்கை தகவல் குறுஞ்செய்தி மூலமாக அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் — 40 Sec. )***

<<<<<<>>>>>>>

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆகாஷ்வாணியின் பிரதான அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

’’பெயர் அளவில் மாற்றமா — பெரிய மாற்றமா’’ என்ற தலைப்பில் இடம்பெறும் இந்த நேர்முக நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளரும். எழுத்தாளருமான பத்மன் என்கிற திரு நா. அனந்த பத்மநாபன் பற்கேற்கிறார்.

அவருடன் உரையாடுகிறார் நிகழ்ச்சி பிரிவு தலைவர் திரு ராமசாமி சுதர்சன்.

இந்த நிகழ்ச்சி நாளை காலை மணி **8.45**-க்கு ரெயின்போ பண்பலையிலும் ஒலிபரப்பாகிறது.

<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட **491** பேருக்கு பணிநியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் வழங்கினார்.

------------------

திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுவரும் புதிய பாலத்தை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று நேரில் ஆய்வு செய்தார்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் வரும் **27**-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

------------------

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தனியார் கல்லூரியில் இன்று வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

----------------

தென்காசி மாவட்டத்தில் தொடர் பனிப்பொழிவு காரணமாக மல்லிகைப் பூக்களின் விலை உயர்ந்துள்ளது.

--------------------

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியில் தேசிய மாசு கட்டுப்பாட்டு தின விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

---------------

பெரம்பலூர் மாவட்டத்தில் மின் சிக்கன வார விழாவின் நிறைவு நாளையொட்டி விழிப்புணர்வு பேரணி இன்று மாலை நடைபெற்றது.

----------

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாத புதிய வாக்காளர்கள் மற்றும் **18** வயது பூர்த்தியடைந்தவர்களுக்கான சிறப்பு முகாம்கள் இன்று அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரியகுமார் யாதவ் தலைமையிலான இந்த அணியில், ஹர்திக் பாண்டியா, அக்க்ஷர் பட்டேல், பும்ரா, சஞ்ஜூ சாம்சன் உள்ளிட்ட **15** வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**உலக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி முதல், மார்ச் 8-ஆம் தேதிவரை இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெறவுள்ளது.**

**<<<<<<<END>>>>>>>**